பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 81331 ★ சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 15 (1—11—71) திங்கள் வெளியூர்: ஐப்பசி 16 (2—11—71) செவ்வாய் [இதழ்: 115

சென்னை மிருகக் காட்சிச் சாலை

தாம்பரத்திற்கு மாற்றப்படும்?

திருச்சி, நவ. 1—

“சென்னை நகரில் அமைந்திருக்கும் மிருகக் காட்சிச் சாலையைத் தாம்பரத்துக்கு மாற்றப்படுவது குறித்து அரசு யோசித்துவருகிறது”

(4-ம் பக்கம் பார்க்க)

சிலை கடத்தும் கூட்டத்தில் சிண்டிகேட் பிரமுகர்

சிவபுரம் சிலைத் திருட்டு வழக்கில் ஒருவர் பிடிபட்டார்--2பேர் தலைமறைவு

இருபதாண்டுக்குப்பின் துலக்கப்பட்ட துப்பு

அமெரிக்காவில் ரூ. 75 இலட்சத்துக்கு விற்கப்பட்ட நடராசர் சிலையை மீட்க நடவடிக்கை

சென்னை, நவ. 1—

தமிழ்நாட்டின் விலை மதிக்கவொண்ணு பண்டைக் காலத்துப் பஞ்சலோகச் சிலைகளெல்லாம் களவாடப்பட்டு மேலைநாடுகட்குக் கள்ளத்தனமாக விற்கப்பட்டு வரும் கொடுமை கடந்த பல ஆண்டுகளாகவே நடந்துவருகிறது.

பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தமிழ்நாட்டுச் சிலைகள் அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்டிருப்பது குறித்தும், அவற்றை மீட்டுத் தமிழகத்துக்குக் கொண்டு வர முயற்சி மேற்கொள்வது குறித்தும், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் அண்மையில் அறிவித்தது நினைவிருக்கலாம்.

இந்தக் கள்ளத்தனமான கடத்தல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பேர்வழிகளில், சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்த ஒரு பிரமுகரும் இருப்பது இப்போது தெரியவந்திருக்கிறது. அவரைப் போலீசார் கைது செய்தனர்.

தஞ்சை மாவட்டம், குத்தாலம் சிண்டிகேட் காங்கிரசுக் கமிட்டியின் தலைவர் எனக் கூறப்படும் திலக் என்பவரே அந்தச் சிண்டிகேட் பிரமுகர்!

இதுவரை, 15 நாள் காவலில் வைக்குமாறு திருவையாறு சப்-மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்; குடந்தை துணைச் சிறையில் அவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 1951-ஆம் ஆண்டு குடந்தையை அடுத்த சிவபுரம் என்ற கிராமத்தில் தரையில் புதைத்திருந்த ஆறு சிலைகளைக் கிராமவாசிகள் கண்டுபிடித்து வெட்டி எடுத்தனராம்.

நடராசர், சிவகாமசுந்தரி, சோமாஸ்கந்தர், அப்பர், விநாயகர், மற்றொரு அம்மன் ஆகியவை அடங்கிய அந்தச் சிலைகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைத்தார்கள்.

இந்தச் சிலைகள், தங்கம் உள்ளிட்ட ஐம்பொன்னால் (பஞ்சலோகம்) ஆன பண்டைச் சிற்ப வேலைப்பாட்டுடன் கூடியவையாகும்.

சிவபுரத்தில் உள்ள கோவிலில் இந்தச் சிலைகளை வைத்துப் பூசை நடத்த விரும்பி அந்தக் கோயில் அறங்காவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்துகொண்டதன் பேரில், அந்தச் சிலைகள், சிவபுரம் கோயிலுக்கு வழங்கப்பட்டன.

மண்களில் நெடுங்காலம் புதைந்திருந்தால், சிலைகள் பழுதடைந்திருந்தன; எனவே அவற்றைப் பழுது பார்க்க ஒரு சிற்பக்கூடத்துக்கு அவை அனுப்பிவைக்கப்பட்டன.

அந்தச் சிற்பக்கூடத் தலைவரும்--மேற்சொன்ன திலக் என்னும் சிண்டிகேட் காங்கிரசுப் பிரமுகரும் சேர்ந்து, நடராசர்--சோமாஸ்கந்தர் ஆகிய சிலைகளை எடுத்துக்கொண்டு அவற்றிற்குப் பதில் வேறு சிலைகளைச் செய்து கொடுத்துவிட்டனராம்.

கண்டெடுக்கப்பட்ட உண்மையான சிலைகளை அவர்கள் பம்பாய்க்கு அனுப்பி திலக்கின் உறவினர் ஒருவர் மூலம் விற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

நடராசர் சிலை மட்டும், அமெரிக்காவில் நியூயார்க் வாசியான 'பென்கெல்லர்' என்பவரிடம் தற்போது உள்ளதாம். அவர் அதனை ரூ 75 இலட்சத்துக்கு வாங்கியதாகச் சொல்லப்படுகிறது.

சோமாஸ்கந்தர் சிலை எங்கு--யாரிடம் உள்ளது என்பது புரியவில்லை.

1968-ல் சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது மலர் ஒன்று வெளியிடப்பட்டது; அதில் பழங்காலத்துச் சிலைகளின் படங்கள் அச்சிடப்பட்டிருந்தன; சிவபுரத்தில் தோண்டி எடுக்கப்பட்ட நடராசர் சிலையின் படமும் அதில் இடம்பெற்றிருந்தது.

அதைப் பார்த்த பலர், இவ்வளவு அழகான நடராசர் சிலையை நேரில் பார்க்கவேண்டும் என்று எண்ணி, சிவபுரம் கோவிலுக்குப் போனார்கள்; அவர்களில், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 'பரேட்' என்பவரும்--புதைபொருள் ஆராய்ச்சியைச் சேர்ந்த மணியும் முக்கியமானவர்கள்.

கோவிலில் இருந்த நடராசர் சிலைக்கும்--தோண்டி எடுத்த போது எடுத்த நடராசர் சிலையின் படத்துக்கும் வேறுபாடு இருப்பதாக அவர்கள் புகார் செய்தார்கள்.

அதன்பேரில், நாச்சியார்கோவில் போலீசார் இதுபற்றி ஒரு வழக்குப் பதிவு செய்தனர்; பிறகு இந்த வழக்கு, குற்ற துப்பறியும் போலீசுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

அவர்கள் தீவிரப் புலன் விசாரணை நடத்தி, சிலைகள் திருடப்பட்டு விற்கப்பட்டதையும்--மாற்றுச் சிலைகள் செய்து மோசடி செய்யப்பட்டதையும் கண்டுபிடித்தார்கள்; அதைத் தொடர்ந்து திலக் கைது செய்யப்பட்டார்.

தானும், சிற்பக்கூடத் தலைவரும்--மற்றொரு உறவினரும் சேர்ந்து பம்பாயில் உள்ள ஒருவருக்கு இந்தச் சிலைகளை விற்றதாக, திலக், நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

சிற்பக்கூடத் தலைவரையும், இன்னொருவரையும் போலீசார் தேடி வருகிறார்கள்.

துப்பறியும் போலீசுத் துணை இன்ஸ்பெக்டர்--ஜெனரல் கிருஷ்ண ராவ், சூப்பிரண்டெண்டு கே. வி. ஞானசம்பந்தம் ஆகியோர் மேற்பார்வையில் மேற்கொண்டு தீவிர புலன் விசாரணை நடந்து வருகிறது.

அமெரிக்காவில் உள்ள நடராஜர் சிலையைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரவும், இன்னொரு சிலையைக் கண்டுபிடிக்கவும் முயற்சிகள் நடந்துவருகின்றன.

திராட்சைத் தோட்டத்துக்குக் கலைஞர் பெயர்

ஆளுநர் ஷா சூட்டினார்

சென்னை, நவ. 1—

கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் உருவாக்கப்பட்டிருக்கும் திராட்சைப் பழத் தோட்டத்துக்கு ஆளுநர் கே.கே. ஷா 'கருணாநிதி திராட்சைத் தோட்டம்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

இந்தத் தோட்டத்துக்கு முதல்வர் டாக்டர் கலைஞரின் பெயரை வைக்கும் முடிவினை, ஆளுநர் நேற்று நடைபெற்ற செடி நடும் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது அறிவித்தார்.

கிண்டி ஆளுநர் மாளிகையில், ஆளுநர்--அவரது மனைவியார் மதுபென் ஷா--மற்றும் உயர்தர அதிகாரிகள் பரச செடிகளை நட்டு விழாக் கொண்டாடினர்.

விலைவாசி உயர்வுக்குக் காரணம்

‘தவறான விநியோக முறையே என்கிறார்’ மத்திய அமைச்சர்

புதுடில்லி, அக். 31—

“நாட்டின் சில பகுதிகளில் விலைவாசிகள் ஏறியிருந்தால், அதற்குத் தவறான விநியோக முறையே காரணமாகும்.

‘விலை உயர்வுக்கு நியாயமே இல்லை; விநியோக ஏற்பாடுகளைச் செம்மையாக வைத்துக் கொள்ளுமாறு மாநில அரசுகளுக்குக் கூறப்பட்டிருக்கிறது”

என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. பி. ஷிண்டே கூறினார்.

“வங்க தேச அகதிகளுக்குப் பெரும் அளவில் பருப்பு வகைகள் வழங்கப்படுவதால் அவற்றின் விலைகள் அதிகரித்திருக்கின்றன” என்றார்.

“பி. எல். 480 ஏற்பாட்டின்கீழ் டிசம்பரிலிருந்து உணவுத் தானியங்கள் இறக்குமதியாகாது” என்றார்.

“உணவுத் தானியக் கொள்முதலில் ரூ. 600 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது; அடுத்த ஆண்டில் ரூ 1,000 கோடியாக ஆகிவிடும்; இதனால், நாட்டின் பொருளாதாரத்தில் சிரமம் ஏற்படும் என்றாலும், விவசாயிகளின் நலனைக் கருதிக் கொள்முதல் நீடிக்கப்படும்” என்றார்.

“அரிசியையும்--கோதுமையையும் பைகளில் போட்டு விற்க அரசு எண்ணியிருக்கிறது; இதன் விலை சற்று கூடுதலாக இருக்கும்” என்றார்.

தொழிலாளருக்கு கட்டாய கிராசுடி

நொடிந்த ஆலைகளை அரசு ஏற்கும்

நொடிந்துபோன--நன்றாக நிர்வகிக்கப்படாத ஆலைகளை ஏற்பதற்காகத் தொழில் வளர்ச்சி--ஒழுங்குமுறைச் சட்டத்தைத் திருத்த மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

கட்டாயமாகக் கிராசுட்டி அளிக்க வகை செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது.

அவசரச் சட்டங்கள் மூலம் இந்த இரு முடிவுகளும் செயல் படுத்தப்படும்.

புதையலில் கிடைத்த பஞ்சலோக விக்கிரகங்கள்

மறைத்து வைத்திருந்த நபரிடமிருந்து மீட்கப்பட்டது

சிதம்பரம், அக். 31—

சுமார் ரூ. 30,000 பெறுமானமுள்ள 14 பஞ்சலோக விக்கிரங்கள் புதங்குடி கிராமத்தைச் சேர்ந்த சந்தரகாச செட்டியாரிடமிருந்து மீட்கப்பட்டன.

சிதம்பரம் வட்டம் ஒரத்தூர் அருகே இச்கிராமம் உள்ளது.

இந்த விக்கிரகங்கள் அவரது வயலிலிருந்து எடுக்கப்பட்டதாகவும்—ஒரு பெட்டியில் அவை வைக்கப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

சந்தரகாச செட்டியார் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

மீட்கப்பட்டவை வருமாறு:—

அம்பாரியுடன் இரு யானைகள்--முறையே 9 அங்குலம், 7 அங்குலம் உயரம்; 2.75 கிலோகிராம் 2 கிலோகிராம் எடை.

இரு ஆண் விக்கிரகங்கள்—7 அங்குலம், 5 அங்குலம் உயரம்; 300 கிராம், 150 கிராம் எடை.

9 அம்மன் விக்கிரகங்கள்; ஒரு விநாயகர் விக்கிரகம்.

வேலை நிறுத்தம் முடிந்தது

புதுவை மாணவர்கள் முடிவு

பாண்டிச்சேரி, நவ. 1—

பாண்டிச்சேரி, காரைக்காலைச் சேர்ந்த கல்லூரி--உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் இன்று முதல் வகுப்புக்களுக்குச் செல்வதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

மாணவர் கோரிக்கை பற்றிப் பரிசீலனை செய்ய 25 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டதையொட்டி வேலை நிறுத்தத்தை முடித்துக் கொள்வது என்று மாணவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

தாகூர் கலைக் கல்லூரியையும், மோதிலால் நேரு பாலிடெக்னிகையும் திறக்கும்படி பாண்டிச்சேரி அரசு உத்தரவிட்டிருக்கிறது.

மாணவர்கள்--வழக்கறிஞர்கள்--பெற்றோர்கள்--ஆசிரியர்கள்--கல்வி நிபுணர்கள்--அரசியல் கட்சிகள்--பொதுமக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய 25 பேர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

நட்புறவு நாடுகளிடை அமெரிக்காமதிப்பைஇழந்துவிடும்-- செனட் முடிவினுல் விபரீத நிலைமை

வாஷிங்டன், அக். 31--

இந்தியா உள்ளிட்ட பல அயல் நாடுகளுக்கு இராணுவ -- பொருளாதார அளிப்பதற்காக அடுத்த இரண்டாண்டுகளுககு--ஆண்டு தோறும் ரூ. 2,185 கோடி அளிப்பதற்கு அனுமதிகோரும் அமெரிக்க அரசின் மசோதா ஒன்றை அந்நாட்டின் செனட் சபை நிராகரித்து விட்டது.

இரண்டாவது உலகப் போருக்கும்பின் -- 25 ஆண்டுகளுக்குமுன் துவங்கப்பட்ட இந்தத் திட்டத்தை, இதுவரையில் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையோ அல்லது செனட் சபையோ நிராகரித்திரும்பது இதுவே முதல் தடவையாகும்.

மசோதாவுக்கு எதிராக 41 வாக்குகளும், ஆதரவாக 27 வாககுகளும் பதிவாகியிருக்கின்றன. இந்த மசோதாவைத் தோற்கடிப்பதற்கு லிபரல் கட்சியினர் கன்சர்வேடிவ் கட்சியினருடன் சேர்ந்து வாக்கு அளித்தனர்.

மசோதாவை செனட் சபை நிராகரிக்கும் என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்றாகும்; எனவே, அந்நிய உதவித் திட்டங்களுக்கே முற்றுப் புள்ளி வைப்பதற்கு இது அறிகுறியாக இருக்கலாம்.

அந்நிய உதவித் திட்டத்தின்கீழ் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு-- செலவிடப்படாமல் கோடிக்கணக்கான டாலர்கள் இருக்கின்றன; இப்போதைக்கு அந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கத்தால் இயலும்; ஆனுல், அதற்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அனுமதியைப் பெற்றாகவேண்டியிருக்கிறது.

அந்நிய உதவி என்பது, திடீரென்று இறந்துவிட்டது; ஆனுல், கொஞ்சங் கொஞ்சமாக மூச்சுத் திணறி அது செத்துவிடும்!

இந்த மசோதா அனுமதிக்கப்பட்டிருந்தால், 1973 ஜூன் 30-ந் தேதி வரையில் அந்நிய உதவித் 'திட்டம்' அனுமதிக்கப்பட்டிருக்கும் உதவித் தொகை அரசிடம் கோடிக்கணக்கில் இருந்தபோதிலும், அதற்குமேல் செலவிடக்கூடிய அதிகாரம் தற்காலிகமாக இந்த வாக்கெடுப்பின்மூலம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

"செனட் சபையின் இந்த முடிவு பொறுப்பற்றதாகும்; மிகவும் இன்றியமையாததான அந்நிய உதவித் திட்டத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று அதிபர் நிக்சன் கூறியிருக்கிறார்.

"உதவிகள் தருவதன்மூலம் 25 ஆண்டுகளாக அமெரிக்கா ஆற்றி வந்துள்ள பணி திடீரென நின்றுவிட்டால், அதன் விளைவுகள் விபரீதமாகிவிடும்" என்றும் அதிபர் நிக்சன் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

ஐ. நா.-வுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் முக்கியப் பணிகளுக்காக உதவியளிக்கும் தொகைகள் செனட் நிராகரித்த மசோதாவில் இடம்பெற்றிருந்தன; இவை தவிர, பலவகை இராணுவ உதவிகளும் இருக்கின்றன; இவற்றையெல்லாம் திடீரென நிறுத்திவிட்டால், உலகெங்கிலுமுள்ள நட்புறவு நாடுகளிடையே அமெரிக்கா தனது மதிப்பை இழந்துவிடும்; இதன்விளைவாக, அதன் எதிரிகள்தான் நன்மை பெறக்கூடும்; இதனை எடுத்துக்காட்டுவதன்மூலம், தனது முடிவை செனட் மறுபரிசீலனை செய்யக்கூடும் என எதிர்பார்க்கலாம்.

வியட்நாமிலும், கம்போடியாவிலும் அமெரிக்கா கையாண்ட முறைகளால் ஏற்பட்டுள்ள விளைவுகள், சனநாயகவாதிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது; இதுபோன்ற பல வகைக் காரணங்களைக் கருத்தில்கொண்டு, 'அந்நிய உதவி முற்றிலும் புதிய அடிப்படையில் அமைவதாக இருக்க வேண்டும்' என்ற கருத்து செனட்டில் அவர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"அமெரிக்காவின் உதவி பெரும்பாலும் போர்கள் மூண்டு நீடித்து நடைபெறுவதில்தான் கொண்டுபோய் விட்டிருக்கிறது; எனவே, முன்போல், தனித்து நிற்கும் கொள்கையை அமெரிக்கா பின்பற்ற வேண்டும்" என்று கன்சர்வேடிவ்கள் கூறியுள்ளனர்.

இந்த இரு கருத்தினரும் ஒன்று சேர்ந்துதான், செனட்டில், அயல் நாடுகளுக்கு உதவியளிக்கும் மசோதாவைத் தோற்கடித்திருக்கின்றனர்.

ஐ. நா. மானியத்திலும் வெட்டு

ஐ. நா. சபைக்கு எதிராகவும் செனட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; ஆண்டுதோறும் ஐ. நா.-வுக்கு ஆகும் நிர்வாகச் செலவில் 31.50 சதவிகிதத்தை இதுவரையில் அமெரிக்கா அளித்து வந்தது; 'இதை 25 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும்' என்று அதிபர் நிக்சனை அத்தீர்மானத்தின்மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. செனட்டின் இந்த முடிவைக் கண்டு ஐ. நா. அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

விவசாயிக்கு உதவுவதில் தமிழகம்

இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது

நிறுவன வங்கிமூலம் ரூ. 153 கோடி கடன் வழங்கத் திட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனுர் தகவல்

திருநெல்வேலி, அக். 31—

"பல்வேறு வேளாண்மைத் திட்டங்களுக்காகத் தமிழக நில வள வங்கிகள்மூலம் ரூ. 153 கோடி அளவுக்குக் கடன் தொகை தரப்படும்.

"இதுவரையில் இல்லாத அளவுக்கும் பெருந்தொகை தரப்படவிருப்பதால், சம்பந்தப்பட்ட விவசாயத் திட்டங்களை விவசாயிகள் விரைந்து தயாரித்துத் தாக்கல் செய்ய வேண்டும்"

என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனுர் சுட்டிக் காட்டி வலியுறுத்தினுர்.

இங்கு அடிப்படை நிலவள வங்கிகளின் மாநாட்டில் பேசுகையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறை மூலம் கடன் வழங்குவதில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.

அரசினர் தரும் கடன் உதவிகளை எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள விவசாயிகள் தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டும்."

நெல்லை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநருமான ஏ. எல். சுப்பிரமணியம், நெல்லை மாவட்ட விவசாய வளர்ச்சிப் பணிகளுக்காகப் பல்வேறு வங்கிகள் தந்துள்ள கடன் தொகைகளை விவரித்தார்.

அகதிகள் எண்ணிக்கை 96 இலட்சத்தை தாண்டிவிட்டது!

புதுடில்லி, அக். 30—

அக். 21-ம் நாள் வரையில் இந்தியாவுக்கு வந்த கிழக்கு வங்க அகதிகளின் எண்ணிக்கை 96 இலட்சத்தைக் கடந்துவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

நாளொன்றுக்குச் சராசரியாக 16 000 பேர் இந்தியாவுக்கு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்களில் 72,29,144 பேர் மேற்கு வங்கத்திலேயே இருந்து வருகின்றனர். 22 இலட்சம் பேர் உற்றார் உறவினர்களுடனும், 50 இலட்சம் பேர் அரசு முகாம்களிலும் தங்கியிருக்கின்றனர்.

15 இலட்சம் மக்கள் தொகையுடைய திரிபுராவில் 14,07,416 பேர்களும், மேகலாயாவில் 6,46,965 பேர்களும், அசாமில் 2 95,090 பேர்களும், பீகாரில் 9,282 பேர்களும் இருக்கிறார்கள்.

வெளிநாடுகளும்--அனைத்துநாட்டு நிறுவனங்களும் அகதிகள் பராமரிப்புக்காக ரூ. 134 கோடி அளிக்க வாக்குறுதி அளித்திருக்கின்றன; எனினும், இதுவரையில் அவைகளிடமிருந்து கிடைத்துள்ள உதவி ரூ. 26.77 கோடி மட்டுமேதான்!

அமெரிக்காவின் இடத்தை இரஷ்யா பிடித்தது

இந்தியாவிலிருந்து பொருள்கள் வாங்குவதில் முதலிடம்

புதுடில்லி, அக். 31—

இந்தியப் பொருட்களைப் பெரும் அளவில் வாங்குவதில் இப்போது இரஷ்யா முன்னணியில் நிற்கிறது.

இதுவரையில் அமெரிக்கா முதலாவதாகவும், ஜப்பான் இரண்டாவதாகவும், இரஷ்யா மூன்றாவதாகவும் இருந்துவந்தது.

இரஷ்யாவுக்கான ஏற்றுமதி 19 சதவிகிதம் அதிகரித்ததும், அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 13 சதவிகிதம் குறைந்ததும், புதிய நிலைமைக்குக் காரணமாகும்.

இப்போது 1, 2, 3, 4-வது இடங்களை முறையே இரஷ்யா— அமெரிக்கா —ஜப்பான் — பிரிட்டன் ஆகிய நாடுகள் வகிக்கின்றன.

தலைமை ஆபீஸ் போன்: 76557 தி'நகர் போன்: 441672

லியோ காபி

கிளை ஆரம்ப விழா

சென்னை--தி'நகர், நெ. 14, ரெங்கநாதன் தெருவில் எங்கள் கிளை ஸ்தாபனம் இன்று (1—11—71) முதல் ஆரம்பமாகும் நற்செய்தியை மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

சுவைத்து மகிழ லியோ காபி

சுத்தத்திற்கும் தரத்திற்கும் லியோ காபி

தங்கள் ஆதரவை விரும்பும்:—

லியோ காபி கிரைண்டிங் ஒர்க்ஸ்,

நெ 16, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை-4.

பி. ஆர். கே. நாடார் சன்ஸ்,

காபிக் கொட்டை, சர்க்கரை மொத்த வியாபாரிகள்,

நெ. 14, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை-4.

போன்: 76557

பொட்டாசியம் குளோரைட் உற்பத்தித் தொழிற்சாலை

ரூ.80 இலட்சம் செலவில் மதுரையில் உருவாகும்

'கூட்டுறவுத் துறையில் அமையும்' -- அமைச்சர் மாதவன் தகவல்

மதுரை, அக். 31—

"ஆண்டொன்றுக்கு 1,800 டன் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று ரூ. 80 இலட்சம் செலவில் மதுரையில் அமைக்கப்படும்; இந்தத் தொழிற்சாலை, இந்தியாவிலேயே நான்காவதாகும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், மதுரை -- இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலதிபர்களின் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்; இதன் தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"இந்தத் தொழிற்சாலைக்கான முதலீட்டில் 50 சதவிகிதத்தைத் தனியார் பங்காக முதலீடு செய்ய வேண்டுமென விரும்பினேன்; காரணம், கூட்டுத் தொழில்முறையில் தொழிற்சாலைகள் அமைப்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதுதான்; இதன்மூலம் தொழிலதிபர்கள், அரசாங்கத்தின் முயற்சிகளில் பங்கு பெறுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இந்தத் தொழிற்சாலைக்கு தமிழக அரசு ரூ. 40 இலட்சம் முதலீடு செய்யும்; எஞ்சிய 40 இலட்சத்தை நிதி நிறுவனங்களும் -- தொழிலதிபர்களும் -- மற்றவர்களுல முதலீடு செய்யும் வகையில் அவர்களிடமிருந்து நிதி எழுப்பப்படும்.

மற்ற மாநிலங்களும் தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு கூட்டுறவுத் துறையில் தொழிற்சாலைகளை நிறுவ முனைந்துள்ளதை மத்திய அரசும் இதுபோன்று அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது."

சலுகைகளை நிறுத்திவிடும் காலம் வந்துவிட்டது

இலண்டன், அக். 31—

"முன்னுள் இந்திய மன்னர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மானியங்கள் -- சலுகைகளை ஒழித்துவிடுவது பற்றி நாடாளுமன்றம் விரைவில் முடிவு செய்யும்.

"இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே அவர்கள், இந்தச் சலுகைகளையெல்லாம் அனுபவித்து வருகிறார்கள்: இந்தச் சலுகைகளையெல்லாம் நிறுத்துவதற்கான காலம் வந்துவிட்டது என நாங்கள் நினைக்கிறோம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, வியன்னுவில் செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் கூறினுர்.

குடும்பக் கட்டுப்பாட்டு பிரச்சாரத்தின் பலன்

பிறப்பு விகிதம் குறைகிறது

இலட்சுமணபுரி, அக். 31—

"1961-ல், இந்தியாவில் பிறப்பு விகிதம், 1,000-க்கு 41-ஆக இருந்தது; ஆனுல், கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தின் பலனுக 1970-ல் இது 1 000-க்கு 37.40 ஆகக் குறைந்திருக்கிறது.

"இன்னும் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் இதை 1,000-க்கு 25-ஆகக் குறைக்க வேண்டுமென்பதே இலக்காகும்"

என்று குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை கூட்டுச் செயலாளர் ஆர். என். மதோக, கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

பாரிஸ், அக். 31—

ஐ.நா.-வில் 'யுனெஸ்கோ' (கல்வி -- விஞ்ஞானம் -- கலாச்சாரம்) நிறுவனத்தில் கம்யூனிஸ்டுச் சீனுவும் சேர்த்துக்கொளளப்பட்டது.

'யுனெஸ்கோ' நிர்வாகக் குழு இம்முடிவை மேற்கொண்டது.

'மனிதாபிமானத்துடன் அணுகி மறுவாழ்வுக்கு வழிவகுப்போம்'

சிறைக் கைதிகளுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டம் பற்றி அமைச்சர் என். வி. நடராசன்

சென்னை மத்திய சிறைச்சாலை அச்சகப் பகுதியில் 2-வது ஷிப்டைத் துவக்கிவைத்து உரை

சென்னை, அக். 31 —

"பல்வேறு குற்றங்களுக்காக இங்கு சிறைப்பட்டுள்ள கைதிகள், சமுதாயத்திலிருந்து நிரந்தரமாக ஒதுக்கி வைக்கக்கூடிய பரம்பரையினர் அல்லர்; இவர்களும் மனிதர்களதான்; இவர்களை மனிதாபிமானத்துடன் அணுகி – இவர்களுக்கு நல்வாழ்வு தருகின்ற அடிப்படையில்தான் இங்கு அமைக்கப்பட்டுள்ள அச்சகமும் மற்றும் இதர தொழில்களும் ஆகும்"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கிக் கூறினுர்.

தமிழக அரசின் மத்தியச் சிறைச்சாலையில் இயங்கிவரும் அச்சகப் பகுதியின் இரண்டாவது ஷிப்டு' முறையை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் துவக்கிவைத்தார்.

அத்துடன், தொழிற்கைதிகட்கு டியூட்-டின்னும் வழங்கும் புதிய முறையையும் தொடங்கி வைத்தார்.

இந்த விழா சென்னையிலுள்ள மத்தியச் சிறைக் கோட்டத்தின் அச்சகப் பகுதியில் நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை வகித்து, சிறைக்கூட அதிகாரியும் -- முன்னுள் காவல்துறை ஆணையாளருமான குப்புசாமி பேசினுர்.

தமிழக அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை இயக்குநர் ரங்காராவ் ஐ.ஏ.எஸ். வரவேற்பு உரையாற்றினுர்.

அச்சகத் துறைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் நாகசுந்தரம், தொழிற் கைதிகட்கு அளிக்கப்பட்ட வசதிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

துணைத் தலைவர் இராதாகிருட்டினன் நன்றி கூறினுர்.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிறையிலிருந்து கைதிகள் விடுதலையாகி வெளியே செல்லும் போது, அவர்களுக்கு வெளியுலகில் இந்தத் தொழில்கள் தாம் சிறந்த வாழ்வுக்கு அடிகோலுவதாக இருக்கும்.

அந்த வகையில், இங்குள்ள அச்சகத் துறையில் இன்னும் 150 பேருக்குத் தொழில் அமையும் வகையில், இரண்டாவது ஷிப்டு' முறையைத் தொடங்கி வைக்கப்படுகிறது.

இங்கு உள்ளவர்களுக்குப் பல்வேறு வசதிகள் தரப்படுவதாகக் கூறினுர்கள்; இரவு வேலை பார்க்கும் கைதிகளுக்குச் சலுகைகளை இன்னும் அதிகப்படுத்தம் போவதாகவும் சொன்னுர்கள்.

இதுபோன்ற தொழில்கள் மூலம் வாழ்க்கையில் பல்வேறு வாய்ப்புக்களை அடைவதற்குக் கைதிகளைத் தயார்படுத்தும் முறையில் இங்கு மூன்றாவது 'ஷிப்டு' முறைகூட வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

சிறந்த சிறைத் தலைமை அதிகாரி கிடைத்திருக்கிறார்; அவர் மூலம் கைதிகள் நல்ல பயனை அடைவார்கள்.

இங்குள்ள கைதிகள் விடுதலையடைந்து வெளியே சென்றுல், மீண்டும் இங்கு குற்றவாளிகளாக வராமல் நாட்டிலே நல்ல பெருமையைத் தேடிக்கொள்ள வேண்டும்; இங்கு கற்றுக் கொள்ளும் தொழிலைக் கொண்டு வெளியில் சீரோடு வாழவேண்டும்.

அண்ணு அவர்கள்கூட இந்தச் சிறையில் இருந்திருக்கிறார்; அப்போது அவருக்கு 'பி' வகுப்பில் வைத்திருந்தார்கள்; அவர் அதை விரும்பவில்லை; ஏதாவது தொழில் செய்ய விரும்புவதாக அவர் தனது விருப்பத்தைத் தெரிவித்தார்; அப்போது அவர் இதே அச்சகத்தில்தான் பணிபுரிந்து தமது சிறை நாட்களைத் தள்ளினுர்.

அரசு சம்பந்தமான அச்சு வேலைகள் இங்கு முழுமையாக -- வெற்றிகரமாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

படித்து விட்டு நிறையப்பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் அரசு முனைப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது; தொழில்கள் விரிவடையும்போது நிறையப்பேர் வேலை வாய்ப்புப் பெறமுடியும்.

அத்தகைய வளர்ச்சியை உண்டாக்குவதற்குத் தொழிலாளர்கள் கோரிக்கைகளைக் கேட்பதுடன் மட்டும் நில்லாமல் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யவும் வேண்டும்."

ஒலி பெருக்கிகளுக்குப் புதிய லைசென்சு முறை

சென்னை, அக். 30—

நவம்பர் 1-ம்நாள் முதல் ஒலி பெருக்கி லைசென்சுகள், வாடகைக்கு விடுவோர் -- வாங்குவோர் இருவர் பெயரிலும் வழங்கப்படும்.

இதுவரையில் வாடகைக்கு விடுவோர் பெயரில் மட்டும்தான் லைசென்சுகள் வழங்கப்பட்டு வந்தன.

லைசென்சு விதிகளை மீறினுல் இனி இருவர் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒலிபெருக்கிகளின் இரைச்சல் தாங்க முடியவில்லை என்று பொதுமக்களிடமிருந்து வந்த புகார்களின் பேரில் இந்தப் புதிய லைசென்சு முறையைக் கொண்டுவருவதாகப் போலீசுக் கமிஷனர் ஷெனுய் கூறினுர்.

'உரிமைகளைக் கோருகிறீர் -- கடமையை மறவாதீர்'

'வலிவுமிக்க உறவுக்கு வழிகோலுவீர்'

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு அமைச்சர் என். வி. நடராசன் அறிவுரை

ரூ. 26,000 செலவிலான நீர்த் தொட்டித் திறப்பு

சென்னை, நவ. 1—

"கடமைகளைச் செய்யுங்கள் -- உங்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதில் கழக அரசு எப்போதுமே தொண்டாற்ற முன்வரும்; அதுவும் உறுதியோடு முன்வரும்.

"உரிமைகள் கேட்பதில் மட்டும் அதிகம் -- கடமைகள் ஆற்றுவது குறைவு -- என்கிற நிலையை உருவாக்காதீர்கள்!"

இவ்வாறு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினுர்.

சென்னை தங்கசாலையில் உள்ள அரசாங்க அச்சகத்தில் நீர் நிலைத் தொட்டியை, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் திறந்துவைத்தார்.

இதுவரையில் அந்த அச்சகத்தில் தண்ணீர் வசதி இல்லாததால் அங்கு உள்ள தொழிலாளர்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர்; எனவே, அவர்களுக்காக ரூ 26,000 செலவில் குடிதண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டது.

நீர் நிலைத் தொட்டியின் திறப்பு விழா நேற்று நடந்தது; விழாவுக்கு இயக்குநர் ரங்கா ராவ் தலைமை தாங்கினுர்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் நாகசுந்தரம் அனைவரையும் வரவேற்றார்.

துணைத் தலைவர் இராதாகிருட்டினன் நன்றி கூறினுர்.

நீர் வழங்கும் குழாயைத் திறந்து அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரையாவது:—

"அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு இரவுப் படியாகக் கிடைக்கும் 75 காசை ஒரு ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் நலத்திலும் -- சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலத்திலும் வசதிகள் பல செய்து வளம் சேர்க்க வேண்டுமென்ற முனைப்பில் உறுதியோடு செயல்பட்டுவருவதுதான் தமிழக அரசு; எனவே உங்களுடைய இந்தக் கோரிக்கையினை நான் முதல்வரோடு கலந்து பேசி ஆவன செய்வேன்.

பேரறிஞர் அண்ணு அவர்களின் வழியில் -- அவரது இலட்சியங்களைச் செயலாக்குவதில் -- உறுதியுடன் செயல்பட்டுவருவது கலைஞர் ஆட்சி; இந்த ஆட்சியில், தொழிலாளர்கள் -- முதலாளிகள் -- நிர்வாகிகள் ஆகிய மூன்று சக்திகளின் உறவும் வலுப்பட அரசு எடுத்துவரும் ஆக்கப் பணிகளை அனைவரும் அறிந்ததாகும்.

அரசு அச்சகத் துறை, தனியார் துறையல்ல; இங்கு தொழிலாளர் -- நிர்வாகிகள் -- அரசு ஆகிய உறவுதான் வலுப்பட்டு நிற்கிறது.

இந்தச் சொத்து, தனியார் சொத்து அல்ல -- உங்கள் சொத்து; இதன் வளர்ச்சியும் வெற்றியும் அரசுக்கு மட்டுமல்ல அரசின் வழியே உங்களுக்கும் பெருமையைத் தேடித் தருகின்ற வெற்றிதான்.

இந்தத் துறை எந்த அளவுக்கு வெற்றிபெறுகிறதோ அந்த அளவுக்கு -- அதன் பெருமைக்கு நீங்கள் சொந்தக்காரர்கள்; ஆகவே, முச்சக்திகளும் கூட்டாகப் பணியாற்றவேண்டும்.

இந்த அச்சகத்திலேதான், அரசுப் பணிகளுக்கான எழுதுபொருள் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் -- என்று அரசு நினைக்கிறது; பாட்டாளிகள் எந்தத் துறையில் இருந்தாலும், அவர்களின் கூட்டாளிகளாக நிற்பதே கழக அரசின் இலட்சியமாகும்; எனவே, நீங்கள் உங்கள் பணிகளை ஆற்றுவதில் சுணங்கிவிடக் கூடாது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் -- குறைக்க வேண்டும் --- அதுதான் இன்றைய நிலைமையில் மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

எனவே, வேலையில் இருப்பவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

செய்யும் தொழில்களில் விரிவும் வளர்ச்சியும் ஏற்படட்டும்.

இந்த அச்சகத் துறையில் மூன்றாவது ஒரு 'ஷிப்ட்' முறையை ஏற்படுததி மேலும் 2,000 பேருக்கேனும் இங்கே வேலைவாய்ப்பு ஏற்படுத்துவோம் -- என்ற நிலையை உருவாக்குங்கள்.

இந்த அச்சகத்துக்கும் இன்னும் நவீன இயந்திரங்கள் பெறுவதற்கான அந்நியச் செலாவணி அனுமதி கிடைத்திருப்பதாக இயக்குநர் தெரிவித்தார்; ரூ. 40 இலட்சத்துக்குக் கோரப்பட்டு ரூ. 30 இலட்சம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; அதன்மூலம் 20 காஸ்டர் இயந்திரங்களும் ஒன்பது 'கீ-போர்டு' இயந்திரங்களும் தருவிக்கப்பட இருக்கின்றன."

மத்திய அரசின் திட்டம்-- தமிழக அரசு ஏற்காது

மருத்துவக் கல்லூரி மாணவரிடம் உறுதிமொழி பெற இயலாது

'கிராமப் பகுதிகளில் பணியாற்ற டாக்டர்கள் கிடைப்பது தமிழ்நாட்டில் சிரமமில்லை' என அறிவிப்பு

திருச்சி, அக். 30—

"மருத்துவக் கல்லூரிகளில் சேருவோர் பட்டம்பெற்றதும் கிராமப்புறங்களில் பணியாற்றுவதாக உறுதிச் சீட்டுக் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் மத்திய அரசின் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஆதரிக்கவில்லை"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், இங்கு திட்டவட்டமாகத் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மற்ற மாநிலங்களைப்போல தமிழ்நாட்டில் டாக்டர்களுக்குப் பஞ்சமில்லை; கிராமப் பகுதிகளில் பணியாற்ற டாக்டர்கள் கிடைப்பது சிரமமாக இல்லை; எனவே தமிழக அரசு, மருத்துவக் கல்லூரி மாணவர்களிடமிருந்து உறுதிச் சீட்டு எதையும் வற்புறுத்தாது.

"தமிழ்நாட்டில் மருத்துவப் பெருந் தொகை வேண்டியிருக்குமாதலால் அதுபோன்ற யோசனையே இல்லை."

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

மேலும் 96 வட்டாரங்களில் விரிவுபடுத்தப்படுகிறது

திருச்சி, அக். 31—

கிராமப்புற வேலைவாய்ப்புக்கான தீவிரத் திட்டத்தை 10 மாவட்டங்களில் 96 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தித் தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 12.50 இலட்சம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

96 புதிய சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களின் பெயர்களையும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

கிராமப்புற வேலைவாய்ப்புக்கான தீவிரத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் ஆதரவில் தமிழ்நாட்டில் ஏற்கனவே 100 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களில் நிறைவேறி வருகிறது; மேற்கொண்டு 96 வட்டாரங்களில் இதை விரிவாக்கித் தமிழ்நாடு அரசாங்கம் தனது நிதியிலிருந்து தொகைகளை ஒதுக்கியிருக்கிறது; 'இதன்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்கள் நீடித்துச் செயல்படுபவையாக இருக்க வேண்டும்' என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

எவருமே ஒழுங்கான வேலைவாய்ப்பு இல்லாதவர்களாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை தரப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகளில் ஒரு தொழிலாளிக்கு ஒரு மாதத்திற்கு ரூ 100-க்குமேல் கூலி தரப்படமாட்டாது.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்கள் வருமாறு:-

வட ஆற்காடு மாவட்டம்:—காட்பாடி, கே. வி. குப்பம், மேற்கு ஆரணி, ஆரணி, வேலூர், திமிரி, வாலாஜா, அணைக்கட்டு, திருவண்ணுமலை, தண்டராம்பட்டு.

தென்னுற்காடு மாவட்டம்:—குமராட்சி, காட்டுமன்னுர்கோவில், விக்கிரவாண்டி, வானூர், சின்ன சேலம், திருநாவலூர், பண்ருட்டி, சங்கராபுரம், விருத்தாசலம்.

செங்கற்பட்டு மாவட்டம்:—எல்லாபுரம், பூண்டி, வில்லிவாக்கம், திருப்பெரும்புதூர், மதுராந்தகம், அச்சிறுபாக்கம், லத்தூர், திருப்போரூர், திருவாலங்காடு, திருத்தணி.

தர்மபுரி மாவட்டம்:— ஒசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், நல்லம்பள்ளி, பாலக்கோடு, பாப்பிரெட்டிபட்டி.

தஞ்சாவூர் மாவட்டம்:—நாகப்பட்டினம், கோரடூர், மதுக்கூர், திருவாரூர், கீவளூர், பட்டுக்கோட்டை, சீர்காழி, திருப்பனந்தாள், நன்னிலம், மாயூரம்.

சுதந்தர வங்கமே தீர்வுக்கு அடிப்படை

தூதரகத் தலைவர் உறுதி

புதுடில்லி, அக். 30—

"'பாகிஸ்தான் அமைப்புக்குள் வங்க தேசம்' என்பது இனிக் கூடியதே அல்ல!

"'சுதந்தர வங்க தேசம்' என்ற அடிப்படையில் பேச்சு நடைபெறுவதாக இருந்தால்தான், வங்க தேசப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண இயலும்"

என்று, வங்க தேசத் தூதரகத் தலைவர் உமாயூன் ரஷீத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அழிவை உணருகிறார் அதிபர் யாகியா கான்

"இந்தியாவுக்கு எதிராக வாலாட்டிப் பார்க்கலாமென்று முதலில் நினைத்த யாகியா கான், பின்னர், அது தனது அழிவில் கொண்டுபோய் நிறுத்திவிடும் என்பதை உணர்ந்ததால்தான் ஐ.நா. செயலாளர் ஊ-தாண்டை இப்போது அழைக்கிறார்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து-- கையைக் கட்டிக்கொண்டு நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?

தற்காப்பு நடவடிக்கையையே இந்தியா மேற்கொண்டிருக்கிறது

யாகியா கான் தோற்றுவித்துள்ள நெருக்கடியின் விளைவு -- பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் விளக்கம்

நிலக் (ம. பி.), அக். 31—

"பாகிஸ்தானின் எந்த ஆக்கிரமிப்பையும் எதிர்த்து முறியடிக்க இந்தியா முழு அளவில் தயாராக இருக்கிறது.

"போரை நாம் விரும்பவில்லை; ஆனால் நாட்டில் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுமானால் நாம் சும்மா கையைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், மத்திய ரிசர்வ் மத்திய போலீசுப் படையின் 32-வது ஆண்டு விழாவின் இறுதியில் பேசுகையில் தெளிவுற விளக்கிக் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தானும் -- அதன் அதிபர் யாகியா கானும் முழு அளவில் போர் வருமென அச்சுறுத்தி, இந்தத் துணைக்கண்டத்தில் ஒரு பயங்கரமான நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறார்கள்; இந்த நிலைமை ஏற்பட்டதில் இந்தியாவுக்குப் பங்கு எதுவும் கிடையாது; பாகிஸ்தான் தான் முதலில் தனது படைகளை எல்லையில் கொண்டுவந்து குவித்தது; இதனால் இந்தியா தனது உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.

நமது நடவடிக்கை ஒரு தற்காப்பு நடவடிக்கையேயாகும்; ஏனெனில் எந்த நாட்டையும் ஆள வேண்டுமென்பது இந்தியாவின் விருப்பமல்ல.

வங்காள தேச விடுதலைப் படைகளின் வெற்றிகரமான நடவடிக்கைகள், யாகியா கானுக்கு மனச் சோர்வை உண்டாக்கியிருக்கிறது; விடுதலைப் படை வங்காள தேசத்தை விடுவிக்கும் முயற்சியில் வெற்றிபெற்றுவிடும் என அவர் அஞ்சுவதால்தான், 'இந்தியாவுடன் போர் வரும்' என மிரட்டுகிறார்."

சென்னை மிருகக் காட்சிச் சாலை..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று வன வளத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

"இதுபற்றி ஆராய மத்திய அரசின் நிபுணர் குழு ஒன்று விரைவில் இங்கு வருகை தரும்" என்றும் அவர் கூறினர்.

பழைய மாணவர்களால் புதிய மாணவருக்கு நேர்ந்த கதி

கோழிக்கோடு, நவ. 1—

புதிதாகச் சேரும் மாணவர்களைக் கேலி செய்யும் ('ராக்கிங்') செய்யும் பழைய மாணவர்களின் நடவடிக்கையால், மாணவர் ஒருவர் இங்கு அபாயகரமான நிலையில் மழித்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

மாத்யூ என்னும் அந்த 20 வயது மாணவர், கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த புதிய மாணவர் ஆவார்; இவரைப் பழைய மாணவர்கள் கொடுமையான முறையில் கேலி (ராக்கிங்) செய்திருக்கின்றனர்; இதனால் அவரது மூத்திரக்காய் பலமாகச் சேதமடைந்துவிட்டதாம்; அபாய நிலையிலிருக்கும் அவருக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

'ராக்கிங்' கொடுமை காரணமாக இந்த ஆண்டு சேர்ந்த மாணவி ஒருவர் கல்லூரியை விட்டு வெளியேறிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிகழ்ச்சி தொடர்பாக இரு மாணவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

புதிய மாணவரை, பழைய மாணவர்கள் கேலி செய்யும் இந்தத் தீய பழக்கத்துக்குத் தமிழ்நாட்டில், அரசு உத்தரவு மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்பது நினைவுகூரத் தக்கது.

ஐ.நா.-வில் சீனத் தூதர்

சூ--யென்--லாயின் நெருங்கிய நண்பர்

ஹாங்காங், நவ. 1—

ஐ.நா. சபைக்குச் செல்லவிருக்கும் சீனத் தூதுக் குழுவின் தலைவர், தலைமையமைச்சர் சூ-யென்-லாயின் நெருங்கிய நண்பர் ஒருவராகத்தான் இருப்பார் என்று தெரியவருகிறது.

74 வயதான மார்ஷல் யே-சென்-யிங் என்னும் அவர், சூ-யென்-லாய்க்குப் பக்கபலமாக இருந்து வருபவராவார் என்று கூறப்படுகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பீகிங்

'சீனு' என்ற பெயரிலேயே அழைக்க வேண்டுகோள்

ஐ. நா. நவ. 1—

"ஐ. நா. சபையில் 'சீனு' என்ற பெயரிலேயே சீன மக்கள் குடியரசை அழைக்க வேண்டும்"

என்று ஐ. நா. சபைக்கு பீகிங் தெரிவித்திருக்கிறது.

"அகர வரிசைப்படி ஆங்கில 'C' என்ற எழுத்தை வைத்தே இடம் ஒதுக்கப்பட வேண்டும்" என்றும் அது தெரிவித்திருக்கிறது.

'சீன மக்கள் குடியரசு' என்ற பெயரிலேயே இப்போது சீனு அழைக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, அதன் ஆங்கில முதல் எழுத்து 'P' என்று வருகிறது.

ஏற்கனவே அழைக்கப்பட்டு வந்த பெயரிலேயே இதற்குமுன் சீனு உறுப்பினராகியிருந்தால் இன்றிலிருந்து மாறும் பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவி சீனுவுக்குக் கிடைத்திருக்கும். சீனு இனிமேல்தான் உறுப்பினராக இருப்பதாலும், தன்னை சீனு என்றே அழைக்குமாறும் கோரியிருப்பதால், இந்த மாதத் தலைமைப் பதவி பேலந்துக்குப் போகிறது.

பாதுகாப்புச் சபையில் மொத்தம் 15 உறுப்பினர்கள் இருக்கின்றனர்; 5 நிரந்தர உறுப்பினர்களும்--10 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் இதில் இருக்கிறார்கள்.

பிளேக் தடுப்பு நடவடிக்கை

கோவை நகராட்சி ரூ. 1.3 இலட்சம் செலவிடும்

கோயமுத்தூர், அக். 31—

கோவை நகராட்சி நேற்றிரவு கூடி, பிளேக் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ரூ. 1.3 இலட்சம் அனுமதித்தது; இந்தத் தொகை அடுத்த மூன்று மாதங்களில் செலவிடப்படும்.

கோபி வட்டத்தைச் சேர்ந்த சத்தியமங்கலத்திலும் எலிகள் செத்து விழுந்தன; எனவே இந்தத் தொற்றுநோய் பரவக்கூடிய சாத்தியக்கூறு பற்றிக் கலெக்டர் அண்டை மாவட்டங்களையும் எச்சரித்திருக்கிறார்.

ஹாப்கின் கழகத்திலிருந்து பிளேக் ஊசி மருந்து

பம்பாய், அக். 31—

ஹாப்கின் கழகம் ஏராளவு கைவசமுள்ள பிளேக் தடுப்பு ஊசி மருந்தைக் கோவைக்கு அனுப்பியிருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக இந்த ஊசி மருந்துக்குத் தேவையில்லாமல் இருந்ததால் சிறிதுகாலமாக அதன் உற்பத்தியை நிறுத்தியிருந்தார்கள். சோதனைகள் முடிந்தபின் மேற்கொண்டு மருந்துகள் அனுப்பி வைக்கப்படும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மதிக்கவில்லை

மூன்று வாரத்தில் 138 அத்துமீறல்கள்

புதுடில்லி, அக். 31—

470 மைல் நீளமுள்ள ஜம்மு-காஷ்மீர் போர் நிறுத்த எல்லைக் கோடு பகுதியில், அக். 1-க்கும் 26-க்கும் இடையே பாகிஸ்தான் படைகள் 138 முறை அத்துமீறியிருக்கின்றன.

இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் இது!

போர் நிறுத்த எல்லைக்கோடு நெடுகிலும் பாகிஸ்தான் படைகள் பதுங்கும் குழிகளையும், மறைந்திருந்து தாக்குவதற்கான சிறு அரண்களையும், கண்காணிப்புப் பரண்களையும் அமைத்திருக்கின்றன.

மருத்துவமனையில் பொன்னேரி கேசவன்

சென்னை, அக். 31—

பொன்னேரி வட்ட தி.மு.க. செயலாளர் கேசவன் 19—10—71 அன்று உடல்நிலை பாதிக்கப்பட்டு, சென்னைப் பொது மருத்துவமனையில் ('சி' வார்டு -- படுக்கை எண்-31)-ல் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாம் இன்னும் ஒரு மாத காலத்திற்குமேல் தங்கியிருந்து, உடல் நலம் பெறவேண்டியிருப்பதால், ஒரு திங்களுக்குக் கழகத் தோழர்களிடையே தொடர்புகொள்ள முடியாமைக்கு வருந்துவதாக அவர் அறிவிக்கிறார்.

நம்நாடு: முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, ... செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

31--10--71-ல் நடைபெற்ற 37-வது குலுக்கல் முடிவுகள் -- பரிசுகள் பெற்ற எண்களின் விவரம் :--

'ஐ. கே.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

158165

5 இரண்டாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

168888	525036	781981	789409
976081			

10 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

039003	231703	676991	708968
712812	822894	854943	902744
940441	951007		

50 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

012491	044522	063435	066833
071532	099016	100677	101109
126239	161155	188044	188362
205778	220997	250968	259889
264579	281785	407681	453595
457109	485331	548482	578032
587587	602010	607810	616863
634631	634841	641522	662269
682321	706109	708277	719142
724245	725246	732592	740124
749594	764263	776189	787827
822810	863392	896241	906417
934992	979443		

1,000 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில துவங்கி கீழ்ககாணும் எண்களில முடிவடையும் எலலா எண்களுககும் :—

0121	1350	1414	2321	3492
3698	5251	6992	7729	9633

'ஐ. எல்.' வரிசை

முதல் பரிசு : ரூ. 1,00,000

142939

5 இரண்டாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ.10,000 விதம்

034188	164937	532155	756485
801363			

10 மூன்றாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

004981	074145	160796	583729
656491	723684	789074	825599
926407	982881		

50 நான்காவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

002885	005515	026309	040731
042729	066597	086418	093689
103308	161170	169922	172189
204068	225209	233749	234499
245029	264664	264978	273762
324218	340319	351038	410730
419762	429753	441413	446054
479320	508835	511677	530493
555653	575298	595050	679689
714445	715462	728113	743192
767493	792953	794089	825384
912792	924228	939406	959575
963811	967397		

1000 ஐந்தாவது பரிசுகள்— ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில துவங்கி கீழ்க்காணும் எண்களில முடிவடையும் எலலா எண்களுக்கும் :—

0179	2278	2886	3210	5115
5218	6220	6368	6492	8428

முதல் பரிசு, இரண்டாவது பரிசுகள் பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், மூன்றாவது பரிசு – நான்காவது பரிசு – ஐந்தாவது பரிசு பெற்ற சீட்டுகளை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள், பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசுச் சீட்டுப் பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-4 என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள கடைசி தேதி: 27-11-1971

38-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் :

38-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1971 நவம்பர் 30-ந்தேதி நடைபெறும்; அதற்கான பரிசுகள் :—

சிறப்புப் பரிசு (எல்லா வரிசைக்கும்)

ஒரு முதல் பரிசு : ரூ. 2,50,000

சாதாரணப் பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)

2-வது பரிசு ரூ. 1-இலட்சம் வீதம் -- ஒன்று	1,00,000
3-வது பரிசுகள் ரூ. 10,000 வீதம் -- 5	50,000
4-வது பரிசுகள் ரூ. 5,000 வீதம் -- 10	50,000
5-வது பரிசுகள் ரூ. 1,000 வீதம் -- 50	50,000
6-வது பரிசுகள் ரூ. 100 வீதம் -- 1,000	1,00,000
	3,50,000

மொத்தப் பரிசுகள் : 5331

மொத்தப் பரிசுத்தொகை: ரூ.20 இலட்சம்

அடுத்த குலுக்கல் :	30-11-1971
அடுத்த குலுக்கலுக்குத் தொடர்கள் : ...	5 (ஐந்து)

ஐ.எம்.' முதல் ஐ.கியூ.' வரை

இதுவரை 258 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது! உங்கள் பணம் உங்களுக்கும் நாட்டிற்கும் உதவுகிறது! உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்கலாமே!

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன், இயக்குநர்,

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.